கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் – இன்று

# தி.மு.க. தலைமைச் செயற்குழுக் கூட்டம்!

## பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு!



தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில் இன்று ( 22.8.2026 - சனிக்கிழமை) காலை 10.00 மணி அளவில் தி.மு.க. தலைமைச் செயற்குழுக் கூட்டம் சென்னை, கலைஞர் அரங்கில் நடைபெறும்.

அதுபோது தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள்: கழக ஆக்கப் பணிகள்**

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை 18.

திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க சார்பாக - கழக இளைஞர் அணிச் செயலாளர்

# எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலினுக்கு வரவேற்பு!

## மாவட்டச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிக்கை!



திருச்சி, ஆக. 22-

திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர், முன்னாள் அமைச்சர், அன்பில் மகேஸ் பொய்யாமொழி விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

கழக இளைஞர் அணி செயலாளர், எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தஞ்சை மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள 22.08.2026 சனிக்கிழமை அன்று மாலை 07.00 மணியளவில் சென்னையில் இருந்து விமானம் மூலம் திருச்சிக்கு வருகை தர உள்ளார்கள். அவருக்கு திருச்சி விமான நிலையத்தில் திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் சிறப்பான வரவேற்பு அளிக்க வேண்டும்.

இந்நிகழ்வில் மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றியம், நகரம், பேரூர், வட்டம், வார்டு மற்றும் கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழகத் தொண்டர்கள், தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கின்றேன் .

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

# மேட்டூர் அணை நீர்மட்டம் 85 அடி நெருங்கியது!

மேட்டூர்,ஆக.22-

மேட்டூர் அணைக்கு நேற்று முன்தினம் 11,317 கனஅடியாக இருந்த நீர்வரத்து, நேற்று காலை 11,366 கனஅடியாக அதிகரித்துள்ளது. அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக விநாடிக்கு 2,000 கனஅடி வீதம் திறந்து விடப்பட்டுள்ளது. திறக்கப்படும் நீரின் அளவை விட, வரத்து அதிகமாக இருப்பதால், அணையின் நீர்மட்டம் தொடர்ந்து உயர்ந்து வருகிறது. நேற்று முன்தினம் 83.77 அடியாக இருந்த நீர்மட்டம், நேற்று காலை 84.27 அடியாக உயர்ந்துள்ளது. நீர் இருப்பு 46.34 டிஎம்சியாக உள்ளது. கர்நாடகாவில் உள்ள கபினி மற்றும் கே.ஆர்.எஸ். அணைகளில் இருந்து சுமார் 14 ஆயிரம் கனஅடி நீர் திறக்கப்படும் நிலையில், ஒகேனக்கல் காவிரியில் நீர்வரத்து 12 ஆயிரம் கனஅடியாக தொடர்கிறது.

'மேகதாது அணை கட்டக்கூடாது' என ஒரு வார்த்தைகூட பேசாதது ஏன்?

# தொகுதி மறுவரையறையில் பல்டி அடித்த விஜய் - ராகுல் காந்தி கூறிய எட்டப்பர் விஜய்யா?

## தென்மாநில முதலமைச்சர்கள் மாநாட்டில் முதல்வர் விஜய் பேசியது தொடர்பாக தயாநிதி மாறன் எம்.பி. பேட்டி!

**சென்னை, ஆக.22 –**

**மேகதாது அணை கட்டக்கூடாது என ஒரு வார்த்தை கூட பேசாதது ஏன் ? என்றும், Delimitation– ல் பல்டி அடித்த விஜய் என்றும், ராகுல் காந்தி கூறிய எட்டப்பர் விஜய்யா? என்றும் தென்மாநில முதலமைச்சர்கள் மாநாட்டில் முதல்வர் விஜய் பேசியது தொடர்பாக கழக நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் அவர்கள் பேட்டியில் கேள்வி எழுப்பியுள்ளார்.**

இது குறித்து தயாநிதி மாறன் எம்.பி. செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:-

சென்ற மாதம் தமிழ்நாட்டிற்கு வடக்கிலிருந்து ஒரு பெரும் கட்சியின் தலைவர் வந்து நிருபர்களை பார்த்து Delimitation யை யார் ஆதரிக்கிறார்களோ அதுவும் குறிப்பாக Fair Delimitation யை யார் ஆதரிக்கிறார்களோ அவர் தமிழ்நாட்டின் விரோதி அவர்கள் எட்டப்பர் என்று கூறிவிட்டு வீர வசனம் பேசிவிட்டு சென்றார். அப்பொழுது அந்த டிலிமிடேஷன் மசோதா நாடாளுமன்றத்தில் வரவிருப்பதாகவும் அந்த மசோதாவில் தி.மு.க. நிலை என்ன என்று ஒரு கேள்வியினை எழுப்பிவிட்டு சென்றார். வராத மசோதாவுக்கு வரப்போகிறது என்று அந்த கட்சியின் தலைவரே எடுத்துக் கொடுத்தவுடன் அந்த கட்சியின் வாலாக செயல்படும் தமிழ்நாட்டின் அந்த கட்சியின் தலைவர் ஒருவர். வரும் 16ம் தேதி வருகிறது மசோதா. 17 ஆம் தேதி வருகிறது மசோதா. தி.மு.க. நிலைப்பாட்டை பாருங்கள் என்ன செய்ய போகிறார்கள் பாருங்கள் என்று அவரும் அவர் பங்கு வீர வசனம் பேசினார்.

**தொகுதி மறுவரையறை தமிழ்நாட்டிற்கு பாதிப்பு வரக்கூடாது!**

அப்பொழுது நாங்கள் சொன்னோம் வராதா மசோதா பற்றி ஏன் பேசி கொண்டிருக்கிறீர்கள் Delimitation யை பொறுத்தவரைக்கும் தி.மு.க.வின் நிலைப்பாடு ஒரே நிலைப்பாடு தான். தமிழ்நாட்டுக்கும் எள் அளவுக்கும் எந்த தீங்கும் வரவிடக்கூடாது. தி.மு.க.வின் நிலைப்பாடு தமிழ்நாட்டில் இருக்கின்ற தற்போதைய 7.18% ஒதுக்கீடு சட்டமன்றத்திலும் சரி நாடாளுமற்றத்திலும் சரி அதே இட ஒதுக்கீடு இருந்தே தீர வேண்டும். தமிழ்நாட்டுக்கு எந்தவித பாதிப்பும் வரக்கூடாது என்று கடந்த மார்ச் மாதம் முதல்முறையாக தென்னக முதல்வர்களை எல்லாம் தமிழ்நாட்டிலே அழைத்து ஒரு சிறப்பு கூட்டத்தை வைத்து அங்கே தீர்மானத்தை செய்தவர் எங்கள் தலைவர் அவர்கள். சரித்திரம் தெரியாதவர்கள் ஏதோ திடீரென்று அவர்களின் கைப்பாவையாக தமிழ்நாட்டிலே ஒருவர் வந்துவிட அவசர கதியிலே அனைத்து கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தை நடத்தினார்கள். அப்பொழுது நாங்கள் சொன்னது முதலில் காவிரியில் தண்ணி வரல, மேகதாது அணை கட்டப்படுகிறது. தமிழ்நாட்டு முதலமைச்சர் விஜய் அவர்களே அனைத்து கட்சி தலைவர்கள் கூட்டத்தை கூட்டி ஒரு தீர்மானத்தை போடுங்கள் ஒரு முடிவு எடுங்கள் என்றோம். ஆனால் தமிழ்நாட்டு முதல்வரோ அதை பற்றி எந்த முடிவும் எடுக்காமல் தமிழ்நாட்டில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தை வைத்து ஒரு தீர்மானத்தை போடுகிறார்கள். என்ன தீர்மானம்? டிலிமிடேஷன் இப்படியே இருக்க வேண்டும். நோ டிலிமிடேஷன் இப்போது இருக்கின்ற 543 தொகுதிகளும் அப்படியே இருக்க வேண்டும் ஃப்ரீஸ் செய்ய வேண்டும் என்று தீர்மானத்தை போட்டார்கள். அதில் காவேரி நதி நீர் பற்றி மேகதாது அணை பற்றி பேசவே இல்லை.



**காங்கிரஸ் கைப்பாவை விஜய்!**

பிறகு தமிழ்நாடு சட்டமன்றத்தில் தொகுதி மறுவரையறை தீர்மானத்தை கொண்டு வந்து நிறைவேற்றினார்கள். அதில் 543ல் ஃப்ரீஸ் செய்ய வேண்டும். தொகுதி மறுவரையறை கூடாது என்றார்கள். ஆனால் இன்று மாலை என்ன ஆயிற்று? தமிழ்நாட்டின் முதல்வர் இங்கு இரண்டு தீர்மானங்களை போட்ட முதல்வர் விஜய் அவர்கள் காங்கிரஸ் பேச்சை கேட்டு கைப்பாவையாக நடந்து கொள்ளும் விஜய் அவர்கள் அமித்ஷாவை பார்த்த உடனே நிலைப்பாட்டை மாற்றிவிட்டார். என்ன நிலைப்பாடு Fair Delimitation முதல்ல சொன்னது டிலிமிடேஷன். 71ல் எப்படி இருந்ததோ அப்படியே ஃப்ரீஸ் செய்யுங்கள் என்பது. ஆனால் சட்டமன்றத்தில் ஏகமனத்துடன் தீர்மானம் போட்டுவிட்டு அமித்ஷாவை பார்த்தவுடன் கூட்டணி மாறிவிட்டாரா விஜய்.? காங்கிரஸ் கூட்டணியை விட்டு பா.ஜ.க. கூட்டணிக்கு மாறிவிட்டாரா.? இல்லையா அவருக்கு அமித்ஷாவை பார்த்தவுடன் பயம் வந்துவிட்டதா.?

பல்டி அடித்த முதல்வர் விஜயை பார்த்து கேட்கிறோம் உங்கள் நிலைப்பாடு என்ன.? தி.மு.க.வை பொறுத்தவரைக்கும் எங்கள் தலைவரும் சரி எங்கள் எதிர்க்கட்சி தலைவரும் சரி தமிழ்நாட்டுக்கு எந்தவித பாதிப்பும் இல்லாமல் இருக்க வேண்டும் என்பதில் ஒரே நிதானமான நிலையில் நாங்கள் இருக்கிறோம். ஆனால் நீங்கள் என்ன செய்தீர்கள் அங்கே தென்னக முதல்வர் கூட்டத்திலே டிகே சிவகுமார் காவிரி நதிநீர் பங்கீடு பற்றி பேசினாலும் ஒத்துழைப்பு என்ற புதிய வார்த்தை ஒன்றை கொண்டு வருகிறார் அந்த ஒத்துழைப்பு படி இனி மேகதாது அணையை கட்ட வேண்டும் மேகதாது அணை கட்டுவதில் தமிழ்நாட்டுக்கும் கர்நாடகத்திற்கும் ஒத்துழைப்பு வேண்டும். என்று சொல்கிறார் அங்கே இருக்கின்ற தமிழ்நாடு முதல்வர் விஜய் அவர்கள் அதை எதிர்த்து ஒரு வார்த்தை கூட பேசாமல் அமைதி காக்கிறார்.

**காவேரி நதிநீர் பங்கீடு!**

ஆனால் இதே காவேரி நதிநீர் பங்கீடு பற்றி அவர் பேசும்போது ஏற்கனவே உச்ச நீதிமன்றத்திலே வந்த தீர்ப்பு படி நடந்து கொள்ள வேண்டும் என்கிறார். அதை தானே எங்கள் தலைவர் கூறினார். அது தானே தி.மு.க.வின் நிலைப்பாடு? நாங்கள் அப்போது அதை சொல்லி கர்நாடகாவுக்கு சென்று அங்குள்ள முதலமைச்சரை சந்தித்து பேச வேண்டாம் என்று நாங்கள் கூறிய போது, "நான் சென்று பேசுவேன்" என்று நீங்கள் கூறினீர்கள். அது தவறான முடிவு என்பதை இப்போது புரிந்து கொண்டீர்களா? தமிழ்நாட்டின் உரிமைகள் தொடர்பான பிரச்சினைகளில் அனுபவம் வாய்ந்த கட்சியான தி.மு.க. கூறும் கருத்துகளை விஜய் கவனத்தில் கொள்ள வேண்டும்.

உங்கள் கூட இருக்கின்ற கூட்டணி தேசிய கட்சியில் ஒருத்தருக்கும் அனுபவம் இல்லை. ஏன்னா காங்கிரஸில் ஒன்னு ரெண்டு படித்த மேதாவிகள் வருவாங்க தமிழ்நாட்டு அரசியல் பற்றி ஒன்றும் தெரியாது அவர்களதான் கரைத்து குடித்து தமிழ்நாட்டு அரசியல் நிலையை மாற்ற போகிறார் என்று தவறான அறிவுரை கூறுவார்கள். தமிழ் தமிழ்நாட்டின் உரிமைகளைப் பறிப்பார்கள். எங்கள் கேள்வி என்றால் இந்திய நாட்டின் பெரிய கட்சியின் தலைவரே நீங்க சொன்ன எட்டப்பர் யார் இன்று No Delimitation வேண்டவே வேண்டாம் என்று சொல்லி தன் நிலையை மாற்றி Fair Delimitation வேண்டும் என்று கேட்கின்ற அந்த எட்டப்பர் யார்.? அப்போது ராகுல் காந்தி யாரை எட்டப்பர் என்கிறார்.? விஜய்யா.? அதுக்கு விஜய் பதில் சொல்வாரா.? இல்லை மாணிக்கம் தாகூர் முதல்வர் விஜய் பேசியது தவறு என்று கண்டிப்பாரா.?

**தமிழ்நாட்டின் உரிமைக்காக தி.மு.க. மட்டும்தான் போராடுகிறது!**

காங்கிரஸ் நிலைப்பாட்ட சொல்லுங்க கர்நாடகாவில் ஒரு நிலைப்பாடு தெலுங்கானாவில் நிலைப்பாடு ஒவ்வொரு மாநிலத்துக்கும் மாறி மாறி பேசுறீங்களே இங்க நிலைப்பாடு என்ன காவரி நதி நீர் பங்கீட்டை பற்றி ஏன் தமிழ்நாடு காங்கிரஸ் வாய் திறக்கவில்லை.? தமிழ்நாட்டுக்கு வருகின்ற காங்கிரஸ் தலைவர்கள் ஏன் பேசவில்லை.? இதை கேட்பது தவறா.? எங்கள் மாநிலத்தின் உரிமைக்கு போராடுகிறோம். தி.மு.க. மட்டும்தான் தமிழ்நாட்டின் மாநில உரிமைக்காக போராடுகிறது.

பல்டி அடித்த விஜய் அவர்களே உங்கள் உண்மையான நிலைப்பாடு என்ன .? இது அறிய நீங்கள் நாங்கள் மட்டுமில்ல தமிழ்நாட்டு மக்களும் ஆர்வமாக இருக்கிறார்கள்.

இவ்வாறு தயாநிதி மாறன் எம்.பி. பேட்டியளித்தார்.

அம்பேத்கர் அயலக உயர்கல்வி உதவித்தொகை முறையாக வழங்கப்படவில்லை!

# உதவித்தொகை வழங்கப்படாததற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

## பேரவையில் முன்னாள் அமைச்சர் கோவி.செழியன் கேள்வி!



சென்னை, ஆக. 22 -

அம்பேத்கர் அயலக கல்வி உதவித் திட்டத்தின் கீழ் உதவித்தொகை முறையாக வழங்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டின் மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்று முன்னாள் அமைச்சர் கோவி. செழியன் கேள்வி எழுப்பியுள்ளார்.

அம்பேத்கர் அயலக கல்வி உதவித் திட்டம் தொடர்பாக கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வந்து பேசிய முன்னாள் அமைச்சர் கோவி.செழியன், மலை கிராம ஆதி திராவிட மாணவர்கள் கூட வெளி நாடு சென்று உயர்கல்வி பயிலக்கூடிய, இந்த மகத்தான திட்டத்தை முன்னாள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கொண்டு வந்ததாக பெருமிதம் தெரிவித்தார். இத்திட்டத்தின் வாயிலாக மலேசியாவில் உயர்கல்வி பயிலும் மாணவர் பாரதிதாசன் உதவித் தொகைக் கிடைக்கவில்லை என வீடியோ வெளியிட்டதை சுட்டிக்காட்டிய கோவி.செழியன், உதவித் தொகை முறையாக வழங்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டின் மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்று வினவினார் முன்னாள் அமைச்சர் கோவி.செழியன்.

சேலத்தில் அரசுப் பள்ளி மாணவர்களுக்குப் பாடம் எடுக்கும் வட மாநிலத்தவர்!

# பள்ளிக் கல்வித் துறையிலும் வட மாநிலத்தவரை நியமித்த த.வெ.க. அரசு!

## வடமாநில ஆசிரியர்கள் தரும் பயிற்சி புரியவில்லை என மாணவர்கள் வேதனை!

சேலம், ஆக. 22 -

சேலத்தில், அரசு பள்ளி மாணவர்களுக்கு நீட், ஜேஇஇ நுழைவுத் தேர்விற்கான பாடங்களை எடுப்பதற்காக வடமாநில ஆசிரியர்கள் நியமிக்கப் பட்டுள்ளதற்கு சமூக ஆர்வலர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் வட மாநிலத்தைச் சேர்ந்தவர்களை ஒப்பந்த பணியாளர்களாக நியமித்திருப்பது தொடர்பான செய்தி வெளியாகி பெரும் அதிர்ச்சி ஏற்படுத்திய நிலையில், பள்ளி கல்வித்துறையிலும் வட மாநிலத்தைச் சேர்ந்தவர்களை தற்போது புகுத்திருப்பது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

அரசு பள்ளிகளில் சிறப்பாக பயிலும் மாணவ மாணவியர்களை தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு நீட், Jee, உள்ளிட்ட பல்வேறு நுழைவுத் தேர்வுக்கான பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. அதன்படி சேலம், நாமக்கல், தர்மபுரி, கிருஷ்ணகிரி உள்ளிட்ட 10 மாவட்டங்களில் சிறப்பு மாதிரி பள்ளியில் தேர்வு செய்யப்பட்ட 300க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு, சேலம் மின்னாம் பள்ளி அருகே உள்ள தனியார் பாலிடெக்னிக் வளாகத்தில் அரசின் சார்பில் சிறப்பு வகுப்புகள் நடத்தப்பட்டு வருகிறது.

கடந்த காலங்களில் அரசு பள்ளியில் சிறப்பாக பணியாற்றும் தகுதி வாய்ந்த அனுபவம் மிக்க ஆசிரியர்களை நியமித்து மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வந்தது. தற்போது, பயிற்சி முகாமில் அரசு பள்ளி மாணவர்களுக்கு வட மாநிலத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள், அனுபவம் இல்லாத பொறியாளர்கள் சிலரை கொண்டு பயிற்சி எடுப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

தமிழ் தெரியாத இவர்கள் ஹிந்தி மற்றும் ஆங்கிலத்தில் மட்டுமே பேசுவதால் அரசு பள்ளி மாணவர்களுக்கு சிரமம் ஏற்பட்டுள்ளதாகவும், வட மாநிலத்தவர்களுக்கு கூடுதலான ஊதியம் வழங்கப் படுவதாகவும் குற்றச் சாட்டு எழுந்துள்ளது.

# நெல்லையில் 4 சிறுமிகளுக்கு பாலியல் வன்கொடுமை! குற்றவாளிக்கு மரண தண்டனை!

## நெல்லை மாவட்ட போக்சோ நீதிமன்றம் அதிரடி தீர்ப்பு!

நெல்லை, ஆக. 22 -

நெல்லையில், பிரார்த்தனைக்கு வந்த சிறுமிகளை பாலியல் வன்கொடுமை செய்த வழக்கில், மத போதகருக்கு மரண தண்டனை விதித்து நெல்லை மாவட்ட போக்சோ நீதிமன்றம் அதிரடி உத்தரவிட்டுள்ளது.

நெல்லை மாவட்டம் தேவர்குளம் அருகே பிரார்த்தனைகளுக்காக வந்த சிறுமிகளை மத போதகர் ஆபிரகாம் பாலியல் வன்கொடுமை செய்ததாக புகார் எழுந்தது.

இது தொடர்பாக ஆபிரகாம் மீது தேவர்குளம் காவல் நிலையத்தில் கடந்த 2022ம் ஆண்டு வழக்குபதிவு செய்யப்பட்டது. திருநெல்வேலி மாவட்ட போக்சோ நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த இந்த வழக்கில் பாதிரியார் ஆபிரகாம் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டதாக நீதிமன்றம் தெரிவித்தது.

இதையடுத்து, மதபோதகர் ஆபிரகாமுக்கு மரண தண்டனை விதித்து, போக்சோ நீதிமன்ற நீதிபதி சுரேஷ்குமார், உத்தரவிட்டார்.

மேலும், பாதிக்கப்பட்ட நான்கு சிறுமிகளுக்கும் தலா 10 லட்சம் ரூபாய் வீதம், மொத்தம் 40 லட்சம் ரூபாய் இழப்பீடு வழங்கவும் அரசுக்கு உத்தரவிட்டார். தீர்ப்பை கேட்டதும் நீதிமன்ற அறையிலேயே ஆபிரகாம் மயங்கி விழுந்தார்.

இதனால் அங்கு சிறிது நேரம் பரபரப்பு நிலவியது.

மக்கள் தொகைக் கணக்கெடுப்புக் கேள்விகளில் மாற்றுத் திறனாளிகளுக்கு அநீதி!

# தேசிய மாற்றுத் திறனாளிகள் மேடை அமைப்பு - ஒன்றிய அரசுக்கு அவசர கடிதம்!

புதுடெல்லி, ஆக. 22 -

மக்கள் தொகை கணக்கெடுப்பு கேள்விகளில் மாற்று திறனாளிகளுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. ஆட்டிசம் உள்ளிட்ட 12 பிரிவினர் விடுபட்டுள்ளதாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜம்மு காஷ்மீர், லடாக், இமாச்சலப் பிரதேசம், உத்தரகாண்ட் மாநிலங்களில் மக்கள் தொகை கணக்கெடுப்பு தொடங்கி உள்ளது.

இந்நிலையில், மக்கள் தொகை கணக்கெடுப்பு கேள்விகளில் மாற்றுத் திறனாளிகள் பகுதியில் 9 பிரிவுகள் மட்டுமே சேர்க்கப்பட்டுள்ளதாக புகார் எழுந்துள்ளது.

2016 மாற்றுத்திறனாளிகள் உரிமை சட்டத்தில் 21 பிரிவுகள் சேர்க்கப்பட்டுள்ளன.

ஆனால், மக்கள் தொகை கணக்கெடுப்பு கேள்வியில் ஆட்டிசம் உள்ளிட்ட 12 பிரிவினர் குறித்த விபரங்களை சேர்க்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று மாற்றுத் திறனாளிகள் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

எனவே, சட்டம் உறுதி அளித்துள்ள 21 பிரிவினரையும் மக்கள் தொகை கணக்கெடுப்பு வரம்புக்குள் கொண்டுவர வேண்டும் என்று தேசிய மாற்றுத் திறனாளிகள் மேடை ஒன்றிய அரசுக்கு கடிதம் எழுதியுள்ளது.

சுமார் 400 நிர்வாகிகள் இதில் கையெழுத்திட்டுள்ளனர்.